ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2045/23 - 2017 නොවැම්බර් මස 15 වැනි බදාදා - 2017.11.15
*2045/23 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 15 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

***1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)***

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

*எனது இல.: கேஎஎஸ்/கேஜீகே/4/2/2015/02/01.*
*காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சின் குறிப்பு இல.: 4-3/9/2015/டப்எஸ்/180.*

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதாக கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்** :

*மத்திய மாகாணத்தில், கண்டி மாவட்டத்தில், கண்டி கடவத்சத்தர கங்கவட்ட கோரளை பிரதேச செயலாளர் பிரிவில், இல. 243, முல்கம்பொல கிராம அலுவலர் பிரிவில் வெல்அட்ட பிரிவு, இல. 01, பேராதெனிய (கண்டி மாநகர சபை எல்லைக்குள்) கிராமத்தில் அமைந்துள்ள நில அளவை மா அதிபதியால் அளந்து தயார் செய்யப்பட்ட 2017.10.30 ஆந் திகதியும் மஹ 6727 ஆம் இலக்கமும் உடைய ஆரம்ப வரைபடத்தில் துண்டு இல. 01 எனக் காட்டப்பட்டுள்ள விலியம் கொபல்வல மாவத்தை, வரிமதிப்பு இல. 595/1, "பொகஹயட்ட பேல" என அழைக்கப்படும் காணியின் மொத்த விஸ்தீரணத்தில் 0.0351 ஹெக்டயார் அளவுடைய கீழ்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணித் துண்டு:*

*1.* ***துண்டு இல. 01 - காணியின் பெயர்: விலியம்கொபல்லவ மாவத்தை, வரிமதிப்பு இல. 595/1, போகஹயட்டபேல; உரிமை கோருவோர் பெயரும் முகவரியும்: திரு மஹிந்த கட்டுகஹ, இல. 39/4 - 1/3, ரஜபிஹில்ல மாவத்தை, கண்டி; விஸ்தீரணம்: 0.0351 ஹெக்டயார்.***

*எல்லைகள்:*

*வடக்கு: ஆரம்ப வரைபட இல. மஹ 3859 இல் துண்டு இல. 02, பாதையும் எஸ். கே. பீ. யட்டிவெல்ல உரிமைகோரும் வலவேவத்த எனும் பொகஹயட்டபெலெஸ்ஸ; கிழக்கு: எஸ். கே. பீ. யட்டிவெல்ல உரிமைகோரும் வலவேவத்த எனும் பொகஹயட்டபெலெஸ்ஸவும் துன்போமலுவ விஹாரையின் விஹாராதிபதி வண. தேரர் அவர்கள் உரிமைகோரும் பொகஹயட்ட பேலவும்; தெற்கு: துன்போமலுவ விஹாரையின் விஹாரை அதிபதி வண. தேரர் அவர்கள் உரிமைகோரும் பொகஹயட்ட பேலவும் ஆரம்ப வரைபட இல. மஹ 3859 இல் காணித்துண்டு இல. 14 உம்; மேற்கு: ஆரம்ப வரைபட இல. மஹ 3859 இல் துண்டு இல. 14, 15 மற்றும் 2.*

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2017 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 14 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு கண்டி, கடவத்சத்தர, கங்கவட்ட கோரளை பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2017 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 07 ஆந் திகதிக்கு முன்னர்

எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேலும் காணி உரித்துக்கான காணி உறுதி மற்றும் ஏனைய தொடர்புடைய எழுத்தாவணங் களையும் காணி விசாரணையின் போது சமர்பிக்குமாறும் வேண்டப்படுகின்றீர்கள்.

பி. எம். பீ. ஜீ. பீ. வீ. பண்டார,
பிரதேச செயலாளர்,
கண்டி, கடவத்சத்தர மற்றும்
கங்கவட்ட கோரளை.

பிரதேச செயலகம்,
கண்டி, கடவத்சத்தர மற்றும்
கங்கவட்ட கோரளை,
2017, நவெம்பர் 11.

11 - 1330

---

திருத்தம்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

இல.: 521/22 உம் 1988, செத்தெம்பர் 01 ஆந் திகதியுடைய வர்த்தமானி அறிவித்தல் தொடர்பாக.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதாக கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

காலி மாவட்டத்தில், வெல்பட பத்துவ (வடக்கு) பிராந்திய வருமான அலுவலர் பிரிவில், மீட்டியாகொடை கிராமத்தில் அமைந்துள்ள சுவடு வரைபட இலக்கம் 2198 இல் துண்டிலக்கம் 01 குறுந்துவத்தை எனும் காணி:

**துண்டு இல. 01**

காணியின் பெயர்: குறுந்துவத்தை; விபரம்: வீட்டுத்தோட்டம். 10 - 25 வயதுடைய மூன்று பலா மரங்களும், 10 - 15 வயதுடைய 15 செவ்விளநீர் மரங்களும், சீமையோடு வேயப்பட்டு பூச்சடிக்கப்பட்ட 04 கட்டிடங்களும், பூட்சிடப்பட்ட ஒரு தண்ணீர் தொட்டியும், 04 மலசலகூடங்களும், கூரைத் தகடு வேயப்பட்ட ஒரு வண்டிக்கொட்டகையும், பூச்சடிக்கப்பட்ட ஒரு காவலறையும் உள்ளன; விஸ்தீரணம்: 0.394 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2018 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 08 ஆந் திகதி மு.ப. 9.00 மணிக்கு அம்பலாங்கொடை பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 25 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். காணியின் உரிமையினை உறுதிப்படுத்துவதற்காக அதன் உயில் மற்றும் ஏனைய எழுத்து மூலமான ஆவணங்கள் அனைத்தும் பரிசீலனை தினத்தன்று உடன் கொண்டு வரப்பட வேண்டும்.

எச். கே. ஸரஸி எஸ். குணசேகர,
பிரதேச செயலாளர்,
அம்பலாங்கொடை.

பிரதேச செயலகம்,
அம்பலாங்கொடை,
2017, நவெம்பர் 09.

11 - 1331

---

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: எம்சீயூடீபி/எல்ஏ/கேஓஎல் (டபி.-16)/16/01-3.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/10/2016/எல்ஆர்பீ/425.

2017 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 02 ஆந் திகதிய 2043/750 ஆம் இலக்கம் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட காணியின் மொத்த விஸ்தீரணம் 2.0081 ஹெக்டயார் எனவும் ஆரம்ப வரைபடம் தயாரிக்கப்பட்ட திகதி 2017.10.20 எனவும் திருத்தம் செய்யப்பட்டுள்ளதென இத்தால் அறியத்தருகின்றேன்.

சீ. டபிள்யூ. அபேசூரிய,
காணி எடுத்தல் அலுவலர்,
கொழும்பு மாநகர அபிவிருத்தி திட்டப் பிரிவு,
கொலன்னாவை பிரதேச செயலாளர் பிரிவு.

கொழும்பு மாநகர அபிவிருத்தி திட்டப் பிரிவு,
இல. 03, ஸ்ரீ ஜயவர்த்தனபுர வீதி,
வெலிகட,
ராஜகிரிய,
2017, நவெம்பர் 09.

11 - 1333

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.